# *மதுசூதனன்!*

வேழம் மயங்கிடுமோர் வெங்கலக் குரலுடையோன்!
வாழை மடல் விரிப்பாய் வரிசையாய் சொல்லிடுவான்!
தாழம் பூப் போலே தள்ளாத மணமுடையோன்!
ஆழம் தேடிவிடும் அன்பான மனமுடையோன்!

தாழிசை விருத்தம் போல் தப்பின்றிப் பேசிடுவான்!
ஆழிசூழ் உலகம் போல் அகன்ற நட்புடையோன்!
நாழிகைத் தப்பாது தன் பணியைத் தொடர்ந்திடுவோன்!
மேழிசூழ் களம் பிறந்து, ஓர் ஆசானின் மகனாகி,

ஆசானின் மகளையே கைத்தலம் பற்றினான்!
நேசமிகு தாயவளும் விஜய லஷ்மி அன்னவனின்
பாசமிகு மனையவளும் விஜயலஷ்மி ஆனாளே!
பாசமிகு நெஞ்சகத்தின் பதிப்பினையே தந்தேனே!
10-10-2021 (10-05 ஏ.எம்.)